வால்பாறை நகராட்சியின் நகர்மன்ற கூட்டம் டிசம்பர் மாதம் 09.12.2022-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

முன்னிலை : திருமதி.செ.அழகுசுந்தரவள்ளி
நகர்மன்ற தலைவர்

பொருள் : 1

இந்நகராட்சிக்கு சொந்தமான ஆணையாளர் அவர்கள் பயன்படுத்திவரும் ஈப்பு வாகன எண். TN.41AZ 4151 என்ற வாகனத்திற்கு பழுது பார்த்தல் பணி மற்றும் இதர பணிகள் M/S CAI Auto Industries Pvt Ltd., பொள்ளாச்சி என்ற நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ளவும், ஏற்படும் செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர மன்ற தீர்மானஎண். 318 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 2

வால்பாறை நகராட்சி 2022-2023-ம் ஆண்டு வட்டாச்சியர் சிறப்பு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்க்கண்ட பணிக்கு 22.11..2022-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | VAO அலுவலகம் கம்பி வேலி அமைக்கும் பணி | 360000 | 1.V.சிவக்குமார்<br>2.G.குசலவன்<br>3.N.நாசர்<br>4.P.சபியம்மாள் | 23.45 % ம.வி. குறைவு<br>12.21 % ம.வி. குறைவு<br>0.06 % ம.வி. குறைவு<br>0.21 % ம.வி. அதிகம் |

அலுவலக குறிப்பு

மாவட்ட ஆட்சித்தலைவர் கோயம்புத்தூர் அவர்களின் விருப்பநிதியின் கீழ் இப்பணிக்கு நிதி ஒதுக்கீடு வழங்கியதை தொடர்ந்து பணி ஆணை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

மன்றம் ஏற்கலாம்

**நகர மன்ற தீர்மானஎண். 319 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 3

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் - 15-வது இஞ்சிப்பாறை பகுதியில் உள்ள பள்ளியில் கழிவறை மற்றும் சத்துணவு மையம் சேதமடைந்துள்ளதால் மராமத்து பணி மேற்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. இதனை மராமத்து பணி செய்ய தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ. 1.50 இலட்சத்திற்கு நகர் மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | இஞ்சிப்பாறை பகுதியில் உள்ள பள்ளியில் கழிவறை மற்றும் சத்துணவு மையம் மராமத்து பணி செய்தல் | 150000 |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர மன்ற தீர்மானஎண். 320 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 4**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் - 10-வது கக்கன்காலனி பகுதியில் நடைபாதை மற்றும் வடிகால் மிகவும் சேதமடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மிகவும் சிரமமாக உள்ளது. இதனை அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ. 1.40 இலட்சத்திற்கு நகர் மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | கக்கன் காலனி க.எண் 9/456 மற்றும் 9/447 அருகில் நடைபாதை மற்றும் வடிகால் அமைத்தல் | 140000 |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர மன்ற தீர்மானஎண். 321 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 5**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் - 10-வது மார்க்கெட் பகுதியில் கழிப்பிடம் மிகவும் சேதமடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மிகவும் சிரமமாக உள்ளது. இதனை அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ. 1.40 இலட்சத்திற்கு நகர் மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | மார்க்கெட் பகுதியில் கழிப்பிடம் மராமத்து பணி செய்தல் | 140000 |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர மன்ற தீர்மானஎண். 322 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 6**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் - 10-வது சிறுவர் பூங்கா பகுதியில் கழிப்பிடம் மிகவும் சேதமடைந்து பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இதனை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவது அவசியமாக உள்ளது. இதனை பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ. 3.50 இலட்சத்திற்கு நகர் மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | சிறுவர் பூங்கா பகுதியில் கழிப்பிடம் மராமத்து பணி செய்தல் | 350000 |

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர மன்ற தீர்மானஎண். 323 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 7

1. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் - 3 ரொட்டிக்கடை பகுதியில் உள்ள குடிநீர் தொட்டியிலிருந்து பழைய குடிநீர் தொட்டி வரை மேல் பகுதியில் குடியிருக்கும் பொதுமக்கள் போதிய சாலை வசதி இல்லாத காரணத்தினால் மருத்தவமணை சென்று வர சிரமமாக உள்ளது. இதனை சரிசெய்ய சாலை அமைத்து தர வேண்டியது அவசியமாக உள்ளது.
2. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் - 3 ரொட்டிக்கடை பகுதியில் உள்ள முனீஸ்வரன் கோவிலுக்கு மேல்பகுதியில் உள்ள குடிநீர் தொட்டி பழுதடைந்து குடிநீர் வெளியே விரையமாக செல்கிறது. எனவே அந்த இடத்தில் புதிய குடிநீர் தொட்டி அமைக்க வேண்டும்
3. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் - 3 ரொட்டிக்கடை பகுதி மக்களுக்கு குடிநீர் பற்றாக்குறையை போக்குவதற்கு அதற்கு மேல்பகுதியில் உள்ள ஐயர்பாடி நர்சரி அருகில் உள்ள நீரினை சிறிய அணை கட்டி குடிநீர் வழங்க வழிவகை செய்தால் எந்த காலத்திலம் குடிநீர் பற்றாக்குறை ஏற்படாது. மேலும் ரொட்டிக்கடை பகுதிக்கு ஆற்றிலிருந்து மின்மோட்டார் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி இடத்தில் சிறுகுடிநீர் அணை அமைத்தால் மேற்படி மின்சார செலவு நகராட்சிக்கு மீதம் ஏற்படும் எனவே தடுப்பனை அமைத்த தர மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. உரிய துறைகளிடம் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளலாம்

**நகர மன்ற தீர்மானஎண். 324 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 8

வால்பாறை நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் குடிநீர் திட்டத்தில் கூட்டுறவு காலனி தரைமட்ட தொட்டியிலிருந்து VAO அலுவலகம் வரையும் அரசு மருத்தவமணை அருகிலும் பகிர்மானக்குழாய் அமைக்க உத்தேச செலவினம் ரூ. 4.50 இலட்சத்திற்கு நகர் மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**நகர மன்ற தீர்மானஎண். 325 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 9**

வால்பாறை நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஜெனரேட்டர் ஆண்டு பராமரிப்பு செய்ய உத்தேச செலவினம் ரூ. 25.00 ஆயிரத்திற்கு நகர் மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**நகர மன்ற தீர்மானஎண். 326 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 10**

வால்பாறை நகராட்சி 20-வது வார்டுக்குட்பட்ட தாய்முடி யூடி பிரிவில் பொருத்தப்பட்டுள்ள உயர்மின் கோபுர விளக்குக்கு மின்வாரிய அலுவலக கேட்புப்படி ரூ. 32600 -ஐ மன்ற முன்அனுமதி பெற்று தொகை செலுத்தியதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**நகர மன்ற தீர்மானஎண். 327 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 11**

வால்பாறை நகராட்சி 15-வது வார்டு பகுதியில் கரடி தாக்கி படுகாயம் அடைந்ததை கருத்தில் கொண்டு பொது மக்கள் நலன் கருதி இணைட்டு தெருவிளக்குகள் அமைத்து கொடுக்க மின்வாரிய அலுவலக கேட்புப்படி ரூ. 8046 தொகை செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**நகர மன்ற தீர்மானஎண். 328 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 12**

வால்பாறை நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் உள்ள எரிவாயு அடுப்புகளை சர்வீஸ் செய்து கொடுக்க உத்தேச செலவினம் ரூ. 30000 -க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**நகர மன்ற தீர்மானஎண். 329 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 13

வால்பாறை நகராட்சிக்குட்ப்பட்ட புதுமார்க்கெட் பகுதியில் அமைந்துள்ள மாட்டு இறைச்சிக்கடைகளில் உள்ள கதவு, ஷட்டர், ஜன்னல்கள் அனைத்தும் துருப்பிடித்து சேதமடைந்த நிலையில் உள்ளதால் சிறுத்தை மற்றும் தெருநாய்கள் கடைகளுக்குள் வரும் வாய்ப்புகள் உள்ளதால் அவற்றை பழுது நீக்கி பராமரிப்பு செய்ய தாயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.3.90 இலட்சத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | மார்க்கெட் பகுதியில் மாட்டு இறைச்சிக்கடைகள் பராமரிப்பு பணி செய்தல் | 390000 |

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர மன்ற தீர்மானஎண். 330 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 14

வால்பாறை நகராட்சிக்குட்ப்பட்ட முடீஸ் பகுதியில் அந்தோணியர் தேவாலயம் அருகில் உள்ள பயணிகள் நிழற்குடை மிகவும் சேதமடைந்த நிலையில் உள்ளதால் புதிதாக பயணிகள் நிழற்குடை அமைக்க தாயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | முடீஸ் அந்தோணியர் தேவாலயம் அருகில் பயணிகள் நிழற்குடை அமைத்தல் | 900000 |

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர மன்ற தீர்மானஎண். 331 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 15

வால்பாறை நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் குடிநீர் திட்டத்தில் வால்பாறை டவுன் பகுதி, ரொட்டிக்கடை மற்றும் சோலையார் அணை பகுதிகளில் பராமரிக்கப்பட்டு வரும் குடிநீர் திட்டப்பணிகளில் மெயின் குழாய் மற்றும் பகிர்மானக் குழாய்களில் அவ்வபோது ஏற்ப்படும் பழுதுகளை உடன் சரிசெய்து கொடுக்க ஆண்டு பராமரிப்பு செலவு ரூ.7.00 இலட்சத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | வருடாந்திர குடிநீர் பராமரிப்பு பணி செய்தல் | 700000 |

அலுவலக குறிப்பு

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**நகர மன்ற தீர்மானஎண். 332 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 16

சிறுவர் பூங்கா நகராட்சி மைதானம் அருகில் குருசாமி வீட்டில் இருந்து சதாசிவம் வீடு வரை பெரிய கழிவு நீர் கால்வாய் மிகவும் சேதமடைந்துள்ளதால் கால்வாயை துார்வாரி புதுப்பித்து கொடுக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**நகர மன்ற தீர்மானஎண். 333 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 17

முடீஸ் அ.நி.உ.பெ மத்திய நடுநிலைப்பள்ளியில் 141 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர். சுற்றுச்சுவர் இல்லாமல் உள்ளதால் விலங்குகள் (சிறுத்தை, கரடி, காட்டு மாடு மற்றும் பாம்புகள்) நடமாட்டம் அதிகம் உள்ளது. மேலும் பள்ளியின் நடைபாதை மழைகாலங்களில் அபாயகரமான சூழ்நிலையில் உள்ளது. எனவே மாணவர்கள் பாதுகாப்பு நலன் கருதி சுற்றுச்சுவர் மற்றும் நடைபாதை அமைத்து கொடுக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**நகர மன்ற தீர்மானஎண். 334 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 18

இந்நகராட்சியில் கீழ்கண்ட இனங்களுக்கு ஏலம் கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. தினசரி சந்தை
2. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11-ல் கூட்டுறவு காலனி பகுதியில் கிராம நிர்வாக அலுவலகம் பின்புறம் குடிநீர் நீர்த்தேக்க தொட்டியின் கருங்கற்கள் மற்றும் நகராட்சி உரக்கிடங்கில் வெட்டப்பட்ட மரங்கள்.
3. தாவரவியல் பூங்காவிற்கு நுழைவுச்சீட்டு உணவகம் மற்றும் பராமரிப்பு பணி
4. மார்க்கெட் பகுதி மற்றும் காந்திசிலை அருகில் உள்ள பொது கழிப்பிடங்கள்

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர மன்ற தீர்மானஎண். 335 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 19**

இந்நகராட்சி 217.87 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டுள்ளதால் 21 வார்டு பகுதிகளிலும் பொது சுகாதாரப்பணி பாதிப்பு ஏற்படாத வகையில் பணியாளர்கள் மற்றும் உபகரணங்களை ஏற்றி செல்வதற்கும் வருவாய் பிரிவு, அரசு வழங்கும் நலத்திட்ட உதவிகள் பொதுமக்கள் அறியும் வகையில் வாகனம் மூலம் அறிவிப்புகள் வழங்க இந்நகராட்சிக்கு சொந்தமான வாகனம் இல்லாததால் புதிய வாகனம் வாங்கும் வரை டிசம்பர் - 2022 முதல் ஒப்பந்தம்/ஏலத்தின் அடிப்படையில் தனியார் வாகனம் பயன்படுத்திக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர மன்ற தீர்மானஎண். 336 அனுமதிக்கப்படுகிறது.**

**குறிப்பு :**

தற்போது பயன்படுத்தி வரும் இரண்டு இலகு ரக வாகனங்களுக்கு நான்கு மாதங்களுக்கு நீட்டிப்பு செய்யுமாறு மன்றம் அனுமதிக்கப்படுகிறது.